

# வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபம்!
(சங்கீதம் 119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

வியாழன்தோறும்

| 27.02.2025 | 09. ‘அந்திக்கிறிஸ்துவின்’ இக்காலத்தில், சபை அனல்கொண்டு இருப்பதாக! |
|---|---|



‘உலகமே பாழாய் அழிந்துபோகிற இக்காலத்தில்’ கிறிஸ்துவின் அடியார்களாகிய நாம் அசதியாயிருப்பது சரியல்ல. பலத்த சோதனையான காலம் இப்பொழுது சபைகளுக்கு வந்திருக்கிற தென்பதை மறக்க வேண்டாம்! வேத வசனத்திற்கும், கிறிஸ்துவின் ஆவிக்கும் விரோதமான ‘அந்தி கிறிஸ்துவின் ஆவி’ சபையின் உள்ளே பிரவேசிக்கத் துடித்து நிற்கும் கொடிய காலம்!

சபையிலுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, இரட்சிப்பின் ஆசீர்வாதத்தில் களிகூர்ந்து, ஆவியில் நிறைந்து வாழ, அரும்பாடுபட்டு ஊழியம் செய்வோமாக! பிழைப்புக்கோ, கடமைக்கோ, மனுஷர் புகழ்ச்சிக்கோ, பேர் பிரஸ்தாபத்திற்கோ சம்பாத்தியத்திற்கோ போன்ற சுய நல நோக்கங்களைத் தூக்கி தூர எறிந்துவிட்டு, கிறிஸ்துவின் அன்பினால் நிறைந்து, ஆத்தும வாஞ்சையுடன் கிறிஸ்துவைப் பிரசங்கிப்போமானால், கட்டாயம் நம் ஸ்தல சபைகளில் பலன் கிடைக்கும்! நீங்கள் கூடும் ஆராதனைதோறும் பிரசன்னமாயிருக்கிற ஆண்டவர், அந்த உத்தம ஊழியத்தை ஆசீர்வதித்து, அநேகரைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்வார்!

– ரத்னம்